உ

கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி ௫ } பிரமாதீச ௵ வைகாசி ௴ { பகுதி ௨

## உபந்யாஸம்.

தற்காலந் தமிழ்நாட்டின் பலபாகங்களில் சபைகளும் உபந்யாஸங்களும் அடுத்தடுத்து நிகழ்கின்றன. தமிழ் மக்களிடம் உபந்யாச விருப்பமும், சிரவண விருப்பமும் வளர்கின்றன. இக்காலத்தை உபந்யாஸகாலம் என்னினும் இழுக்காது. இதுபொழுது ஆரம்பகாலமாதலின் உபந்யசிப்போரும் சிரவணஞ் செய்வோரும் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பலவுள. உபந்யஸிப்போர் கவனிக்கவேண்டியவற்றைமட்டுமே இவண் கூறப்புகுந்தனம்.

உபந்யஸிப்போர் தாம் எடுத்துக்கொண்ட விஷயத்தைப்பற்றி நீள நினைந்து ஆன்றோர் கருத்துக்களைத் தழுவிப் பாகுபாடுசெய்து தம் மனத்துள்ளே யமைத்துக்கொண்டு பேசப் புகுதல் வேண்டும். "காலமும் இடமும் வாலிதினோக்கிச் சிறந்துழி யிருந்துதன் றெய்வம் வாழ்த்தி, உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து, விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து, கொள்வோன் கொள்வகை அறிந்து அவனுங்கொள" என்றுகூறும்போதகாசிரியரிலக்கணத்தை மேற்கொண்டு எடுத்த விஷயத்தை விட்டுப் புறஞ்செல்லாது பேச வேண்டும். எடுத்த விஷயத்தை விட்டு வேறொன்றைப் பற்றுதல் "மற்றொன்று விரித்த" லென்னும் குற்றமாமென்பதைத் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

பருந்தும் நிழலும், மணியும் ஒளியும்போன்ற சொல்லும்பொருளும் தாம்கொண்ட கருத்தை விளக்குவனவாக மரபு பிறழாது பேசவேண்டும். "எப்பொருளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்,

செப்பின ரப்படிச் செப்புதன் மரபே" என்பது நினைத்தற்குரியது. கருத்தின் றன்மையைப் பலவகைச் சொற்களாற் கூறலாமாயினும் அவற்றுள் இதுவே சிறந்ததென்று ஆன்றோர்கொள்ளுமாறு குறித்த பொருளை அதன் பிரதிசாயலாகப் படம் பிடித்துக் காட்டுவது போலச் சிறிதும் வேறுபடாவண்ணம் ஏற்றசொற்களாற்கூறவேண்டும். சொற்கள் செஞ்சொல், ஆக்கச்சொல், குறிப்புச்சொல் என மூவகைப்படும்.

செஞ்சொல்:—இடுகுறி காரண வகைகளால் நேராகவே குறித்த பொருளைத் தருவது. ஆக்கச்சொல்:—அச்சொல்லின் சம்பந்தம் பெற்று இலக்கணையாக ஆகுபெயர் அன்மொழித்தொகை முதலியவாற்றால் குறித்த பொருளைத் தருவது. குறிப்புச்சொல்:—இவ்விரண்டுமன்றி வேறாகத் தோன்றிச் சொல்லின் சம்பந்தம் பற்றாது மாறுபடு புகழ்நிலை புகழாப் புகழ்ச்சி முதலியவாற்றால் யாதானுமோர் குறிப்புப் பற்றிக் கருதிய பொருளைத்தருவது. கல்வி கேள்விகளால் நூல் வழக்கும் உலகவழக்கும் தெரிந்து பாஷா ஞானமுதிர்ச்சியுடையார்க்கே இச்சொற்களை யுபயோகிக்கும் திறமையுண்டாம். திசைச்சொல், இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் முதலியவற்றையும் இடமறிந்து அமைத்துப் பேசவேண்டும். குறில் நெடில் வன்றொடர் மென்றொடர் இடைத்தொடர் ஆகியவற்றைச் சமயோஜிதமாகத்தொடுத்து, எதுகைமோனை மடக்குமுதலிய செய்யுளிலக்கணங்களை யிடையிடையேசெறித்து இன்றியமையாத சந்திகளைவிடாது மலர்ந்த முகத்தோடு அவையோர் செவியில் அமிர்ததாரை புக்காற்போன்ற இனிய குரலுடன் பேசவேண்டும்.

சொற்குற்றம், பொருட்குற்றம், சந்திவழு, முடிபுவழு முதலிய பிழைகளை நீக்கவேண்டும். சொல்வழுவாவது ஒருமொழியின் இயற்கையமைப்பை யறியாது இழிசனர் வழக்கைக் கொண்டு கூறல். பொருள் வழுவாவது:—ஆக்கியோர் கருத்துக்கும் ஆன்றோர் கொள்கைக்கு மாறுபடப் பிறிது பொருள் கூறல். சந்திவழுவாவது ஒற்று மிகவேண்டிய இடத்து மிகாமையும் இயல்பாக வேண்டிய இடத்து ஒற்றுமிகுதலு முதலியவாக்கூறுதல். முடிபு வழுவாவது எழுவாய் பயனிலைப் பிறழ்ச்சி. இத்தகைய குற்றங்கள்படப் பேசினால் பேசும் போதே அவைகளத்தறிஞர் அருவருப்புறுவர். அதனைக்கண்டு ஏனையரு மதியார். இத்தகைய குற்றங்களுடன் பேசப்படும் உபந்யாஸமானது பேசுவோர்க்குப் பழிப்பும் அவையினர்க்கு வெறுப்பும் விளைப்பதாகும். கேட்போருள்ளம் வேட்குமாறு சொற்சுவையும் பொருட்சுவையும் தொடைநயமும் ஓசையின்பமும் அமையப் பேச வல்லவனே உபந்யாஸ வல்லனாவான். அவன்புரியும் உபந்யாஸமே உலகைத் தன்வசப்படுத்தும். இதனாற்றான்.

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்" எனவும்.
விரைந்து தொழில்கேட்கு ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"
எனவும், கூறினர் பொய்யில் புலவர்.

"இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடையறிந்த நன்மை யவர்" என்னுந் தேவர்வாக்கு ஈண்டுக் கவனித்தற்குரியது. இதன் பொருள். சொல்லின் நடைதெரிந்த நன்மையவர்—தாங்கூறுஞ் சொற்கள் பொருள் பயக்குமுறையை யுணர்ந்த நல்லோர். இடைதெரிந்து அவையின் செவ்வியும் நடையின் செவ்வியும் அறிந்து. நன்குணர்ந்து சொல்லுக—தாம் சொல்லுதலாலும் அவையார் கேட்டலாலும் விளையும் நன்மையினையுணர்ந்து சொல்ல வேண்டும் என்பதாம். அவையின் செவ்வியறிதலாவது—இவ்வவைக்கு இதுபொழுது இது ஏற்குமென்பதைத் தெரிதல். நடையின் செவ்வியறிதலாவது—சிறிய கண்ணடியில்பெரிய மலையைக் காட்டல்போல் சொற்சுருக்கத்திற் பொருட்பெருக்கம் அடங்கி விளக்கக்கருதிய பொருள் வெளிப்படுமாறு இழுமெனவொலிக்கும் விழுமிய ஓசையோடு கேட்டார் மனம் அசைவற்றுத் தம்பித்து நிற்க "சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் நவின்றோர்க்கினிமை நன்மொழிபுணர்த்தலாதிய அழகு வாய்ப்பப் பேசுமுறை யறிதல். நன்குணர்தலாவது—அறம்பொருளின்பம் வீடு என்பவற்றுளொன்றாய விழுப்பயன் சித்திக்குமாற்றைக் கருதல். இவற்றையெல்லாம் நன்கு தெரிந்து கருதிய பொருள் அதுவோ இதுவோ என மயங்கவைக்கு மொழிகளையும், நின்று பயனில்லாதவெற்றுரைகளையும், விலக்கவேண்டும். அடியிலிருந்து கரும்பு தின்பதுபோன்று போகப்போக மதுரங் குறைந்து முடிவில் சுவையற்றொழிவதாகிய 'சென்று தேய்ந்திறுதல்' என்னுங் குற்றத்துட்படாது, நுனியிலிருந்து கரும்பு தின்பதுபோன்று கேட்கக் கேட்க இனிக்கும்படி உபந்யஸிக்கவேண்டும். குறித்த பொருளின் தன்மை யின்னதென்று தாம் தமது சொற்களானே விளக்குதலுடன் ஆன்றோர்கொள்கையுமிதுவென்று உதாரணவாயிலாகவும் காட்டுதல் இன்றியமையாததொன்றாம். அங்ஙனம் காட்டினாற்றான் குறித்த பொருள் பசுமரத்தாணிபோல் நிலை நாட்டப் பெற்றதாகும். நெடுநேரம் பேசவிரும்பி வீணாரவாரச் சொற்களைப்பெய்தல் நன்றன்று.

"பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்றா தவர்" என்பர் தேவர்.

பேசுவோனது இயற்கையறிவும் நூலுணர்ச்சியும் அவன்பேச்சினாலே வெளிப்பட்டுவிடும். சட்டியிலுள்ளதுதான் அகப்பையில் வருமாதலால் பேசுவோர் தமது ஆற்றலினும் அதிகமாகப்பேசவே

ண்டுமென்று எவ்வளவு தான் முயன்றாலும் பயன்படாது ஆக லின் எதையும் முதலில் தாம் நன்கு ஆராய்ந்து தெளிந்துகொண்டு பேசப்புகுவதே நலமாம். சிலர் தமது இயற்கைப் போக்கைத் தாமே மதியாது பிறரைப்போற் பேசவேண்டுமென்னும் ஆசைவயப்பட்டுத் தம்மியல்பை மாற்றிப்பிறரைப்போற் பேசப்புகுகின்றனர். "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி, தானுமதுவாகப் பாவித்துத்— தானுந்தன், பொல்லாச் சிறகைவிரித் தாடினாற்போல, அவர்க்கது பரிபவத்தையே விளைப்பதாகும். ஆதலின் எவரும் தந்தம் இயற் கையமைப்பின் வழி அறிவை விருத்திசெய்து பொருள்களை ஆரா ய்ந்து உபந்யஸித்தலே தக்கதாம்.

"நாநலமென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூஉ மன்று" என்பவாகலின் நாநலமென்கிற சொல்வன்மையானது சிலர்க்குமட்டுமே இயல்பாக அமைந்துறும். நளபாகம் வீமபாகம் என்பது எல்லார்க்கும் வருமா? எட்டாப்பழத் துக்குக் கொட்டாவிவிடுதலால் யாது பயன்? எந்தச் செயலும் அவர வர் தந்தம் சக்தியறிந்து மேற்கொண்டால் மட்டுமே பயனுறும். இதனை யறியாது "செந்தமிழும் நாப்பழக்கம்" என்பதை நினைந்து பல்காற்பழகினால் நல்வாக்கு வந்துவிடுமென நம்பிப்பேசப்புகுவாரு முண்டு. இவர் பேச்சானது கவித்துவ சக்தி யியற்கையி லமையப் பெறாதார் காரிகை கற்றுச் சொற்சேர்க்கைதோறும் இலக்கண விதி யைப் புகுத்திப் பார்த்துப் பாடுகிற செய்யுளைப் போல்வதேயாம். இவைகளை யெல்லாம் நோக்கியன்றோ "வார்த்தை பதினாயிரத்தொ ருவர்" என்றார் முதியோர். பேசுதற்குக் கூறிய இவ்வனைத்தும் வசனநடை யெழுதுதற்கும் ஏற்புடையவாகும். பேசுந்திறமையை யும் எழுதுந்திறமையையும் நன்குபெற விரும்புவோர் முயற்சி வலி யாற பெறுதலும் ஏகதேசத்திலுண்டு. அன்னவர் "அறையிலாடி அம்பலத்திலாடு" என்றவண்ணம் முதலிற்பேரவைக்கட் புகாது சிற்ற வைகளிற்புக்குப் பல்காலிடைவிடாது ஊக்கத்துடன் பயிற்சிசெய்து வரிற் பெறுதலுங் கூடும். முயற்சி திருவினையாக்குமென்பதை யாம் மறுக்க வரவில்லை. தொடக்கத்திலேயே பேரவைக்கட்புக்கு த்தாமும் பரிபவப்பட்டுப் பிறர் காலத்தையும் வீணாக்காமை வேண் டியே உபந்யாஸ சக்தியைப்பற்றி யித்துணையும் கூறினேம்.

இதுகாறுங் கூறியவாற்றால் உபந்யாஸ சக்தியும் நூலுணர்ச்சி யும் பெற்றவரே பேரவைக்கட் பேசப்புகவேண்டுமென்பதும், அன் னவரையே அவையினர் தெரிந்தெடுத்தல் வேண்டுமென்பதும், இங் ஙனங் கருதிச்செய்யா வழிப்பயன் பெறுதலருமையென்பதும பிறவு மாம்.

பத்திராதிபர்.

# தமிழ்வளர்ச்சியும் சபைகளின்கிளர்ச்சியும்.

(10-வது பக்கத் தொடர்ச்சி.)

பெரும்பாலும் சமயமும் விசேடமும் ஒரு தன்மையுடை யன. நிருவாணமோ இருவகைப்பட்டு நிற்கும். அவை சத்தி யோ நிருவாணம் அசத்தியோ நிருவாணம் என்பனவாம். அசத்தி யோ நிருவாணம் தேகாந்தத்தில் முத்திதரும். சந்தான குரவரி லொருவராகிய உமாபதிசிவாசாரிய சுவாமிகள் முள்ளிச்செடி, பெற் றான் சாம்பான் இவர்களுக்குச் செய்தருளிய தீக்கை இதுவேயாகும்.

இனி, சபீஜதீக்கை ஒழுக்கவழியில் வழுவாது நிற்கும் உத்தம ரீர்க்கு நித்தியம் நைமித்தியம் காமியம் என மூன்றினும் அதிகா ரமுடைய ராகச்செய்தலாம். இதுதான் சாதாரதீக்கை.

சரியையில் நிற்போர்க்குச் சமயமும் கிரியை யோகங்களில் நிற்போர்க்கு விசேடமும் ஞானத்தில் நிற்போர்க்கு நிருவாணமும் உரித்தாதல் அறிந்துகொள்க.

அநாதியே ஆணவமலபந்தனை ஆன்மாவிற்கு பூர்வார்ச்சித மான கன்மததைப்புசித்துத் தொலைப்பிக்கும் மாயாமலத்தைக் கூட் டி இதில் தநு கரண புவன போகங்களினாலே அளவற்றகாலம் சாமி யம் பெறாத கன்மத்துலை யொப்புவந்து சத்திநிபாதம் பிறக்கும். அது நான்கு வகைப்படும். (1) மந்ததரம் (2) மந்தம் (3) தீவிரம் (4) தீவிரதரம் என்பன. ஈண்டு இருவினையொப்பு என்பது ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்புமின்றி, புண்ணியபாவங்களில் ஒப்ப உவர்ப்பு நிகழும் ஓர் நிலை. மலபரிபாகம்-மலம் தனதுசத்தி தேய்தற் குரிய துணைக்காரணங்களோடு கூடுதல். சிவசத்தி, ஆன்ம அறிவில் வந்து வீழ்தல் சத்திநிபாதமாம்.

மந்ததரம், வாழைத்தண்டில் தீமூட்டுதல்போலாம். மந்தம், பச்சைவிறகில் தீமுட்டுதல்போலாம். தீவிரம், காய்ந்தவிறகில் தீமூ ட்டுதல்போலாம். தீவிரதரம், கரியில் தீமூட்டுதல் போலாம்.

(1) மந்ததரத்தில் சாதகாசாரியனை யடைந்து சமயதீக்கை யைப்பெற்று மந்திராதிகாரத்தையுடையவனுய்ச் சிவனையும் சிவனடி யாரையும் புறக்கருவியால் வழிபட்டுப்பின்,

(2) மந்தசத்திநிபாதம் வர,போதகாசாரியனையடைந்து விசேடதீக்கை பெற்று அர்ச்சனை யோகஞ்செய்யும் அதிகாரத்தையடைந்து சிவனை உட் கருவி புறக்கருவிகளால் வழிபட்டுப்பின்,

(3) தீவிரசத்திநிபாதம் வந்து யோகாதிகாரத்துக்குப் புறக்கருவியை நீக்கி உட்கருவியாலே சிவனைத் தியானித்துணர்ந்துபின்,

(4) தீவிரதரசத்திநிபாதம் வந்து ஞானசாரியனையடைந்து சத்தியோ நிருவாண முதலிய தீக்கை பெற்று,சிவாநுபூதியையடைவன். விரிவஞ்சி ஒருவாறு தீக்கையினை முடித்தாம். பஞ்சாக்ஷர ஜெபம் சிவபூஜை முதலியனவற்றைக் கூறுதற்கு இடமின்மையால் விடுத்தாம்.

மேல், சரியை முதலிய நாற்பாதங்களைச் சிறிது விளக்குவாம்.

(1) ஸ்தூலத்தைப் பொருளென்றுணர்ந்து காயத்தொழில் மாத்திரையால் வழிபடல் சரியை.

(2) பக்குவவிசேடத்தால் சகள நிட்களமாகிய சூக்கும வடிவினை உள்ளும் புறம்பும் விதித்தவாறே வழிபடல் கிரியை.

(3) அகத்தொழிலால் நிட்கள அதிசூக்கும வடிவை வழிபடுதல் யோகம்.

(4) உணர்வு விளங்கி அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப்பிழம்பே சொரூபமென அறிவுத்தொழில் மாத்திரையால் கேட்டல் முதலியவற்றால் வழிபடுவது ஞானம்.

இச்சரியை முதலிய நான்கும் அரும்பு மலர் காய் கனிபோலாம். சோபான முறையால் ஒன்றற்கொன்று அதிகமாய் நான்காவது நின்ற ஞானமே முடிவானதாம். முறையே இந்நான்கிலும் அறிவு நுணுகி வர வர அறியாமையாகிய மலமும் அம்முறையே தேய்ந்து தேய்ந்து வரும். இவற்றின் பயன் சாலோகாதி முதலியன. சிவசாயுச்சியத்திற்கு மேலொரு முத்தியுமில்லை.

"இரும்பைக்காந் தம்வலித்தாற் போலிசைந்தங் குயிரை
யெரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத்தா னாக்கி
அரும்பித்திந் தனத்தையன லழிப்பதுபோன் மலத்தை

யருத்தமல னப்பணைந்த வுப்பேபோ லணைந்து
விரும்பிப்பொன் னிலைக்குளிகைப் பொளிப்பதுபோ லடக்கி
மேலித்துத் தானெலா மேதிப்பா ளுகிக்
கரும்பைத்தே னைப்பாலை கனிபழுதைக் கண்டைக்
கட்டியையொத் திருப்பனந்த முத்தியினிற் கலந்தே."

இச்செய்யுள்கொண்டு சிவசாயுச்சிய மித்தன்மைத்தென உணர்ந்து கொள்க.

மேற்கூறிய சரியை கிரியை யோக ஞானங்களை முறையே தாசமார்க்கம் சற்புத்திரமார்க்கம் சகமார்க்கம் எனச் சிவாகமங்கள் கூறும். இவைகளே இறப்பில் தவங்களாகிய சிவபுண்ணியங்களாம்.

சிவபுண்ணியம் செய்வதற்கு அங்கமாகிய சிவதீக்ஷையின்றிச் செய்வது பொது. சிவதீக்ஷையுடன் செய்வது சிறப்பு.

அச்சிவபுண்ணியமும் உண்மை உபாயமென இருவகைப்படும்.

இவற்றுள் உண்மைப்பத்தியைப்பற்றி நிகழும் உபாயம் புகழையும் பற்றி நிகழும்.

சரியை முதலிய நான்கினுள் ஒரோவொன்று நன்னான்காய்ப் பின் பல திறப்படும். முதலில்,

(1) சரியையிற்சரியை—திருக்கோயில் அலகிடல் முதலியன.

சரியையிற்கிரியை—ஆவரணமூர்த்திகளில் ஒரு மூர்த்தியைப் பூசித்தல்.

சரியையில் யோகம்—நெஞ்சினுள் உருத்திரக் கடவுளைத் தியானஞ்செய்தல்.

சரியையில் ஞானம்—தியானபாவனையினுறைப்பால் ஓர் அநுபவ உணர்வு நிகழ்தல்.

(2) கிரியையிற்சரியை—சிவபூசைக்குரிய உபகரணங்களைச் செய்துகோடல்.

கிரியையிற்கிரியை—சிவலிங்கத்திற்செய்யும் பூசை.

கிரியையில் யோகம்—அந்தரியாகம்.

கிரியையில் ஞானம்—அந்தரியாகத்தாலுறும் அநுபவவுணர்வு.

(3) யோகத்திற்சரியை—இயமம் நியமம் ஆசனம் பிராணாயாமம்.

யோகத்திற்கிரியை—பிரத்தியாகாரம் தாரணை.

யோகத்தில்யோகம்—தியானம்.

யோகத்தில்ஞானம்—சமாதி.

(4) ஞானத்திற்சரியை—கேட்டல்.

ஞானத்திற்கிரியை—சிந்தித்தல்.

ஞானத்தில்யோகம்—தெளிதல்.

ஞானத்தில்ஞானம்—நிட்டைகூடல்.

இவற்றுள் யோகத்தில் ஞானம் வரை பதமுத்திகளும் ஞானத்திற்சரியை முதல் மூன்றினுக்கு சுத்த சாலோக முதலியனவுமாம். ஞானத்தில்—ஞானத்தால் பரமுத்தி கிட்டும். ஆண்டு உயிர் தான் சுவானுபவம் ஒன்றினுககே உரித்தாய் நிற்கும்.

சரியை கிரியை யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோக்ஷங்கிட்டாததாகும். நன்மை எனப்படுவனவற்றுளெல்லாம் சிறந்த நன்மை எனப்படுவது வீடுபேறொன்றேயாம். அதனால் ஞானம் சன்மார்க்கம் அல்லது நன்னெறி யெனப்பட்டது.

முன்னர் அறத்தினுட்பட்ட நன்னெறி விளக்கிப் பின்னர் சமயத்துட்பட்ட சன்மார்க்கமும் விளக்கினும். முன்னைய நன்னெறியிற்சிறந்தது கொல்லாமை. பின்னைய நன்னெறியிற் சிறந்தது ஞானம். அதற்கு மேற்பட்ட மார்க்கமொன்றுமில்லை.

இம்மார்க்கங்களை எல்லாம் நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல எடுத்துரைப்பது வேதசிவாகமங்களேயாம். இவ்வேதசிவாகமங்கள் வடமொழியின் கண்ணேயுள்ளன. அவைகளையறிதற்கு வடமொழிப்பயிற்சியும் வேண்டற்பாலதாம். இவ்விருவகை முதனூல்களைப்பற்றி ஒரு சிறிது பேசுவாம்.

"வேதமோ டாகம மெய்யா மிறைவனூ
லோதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே"

வேதம் பொது நூலென்றும் சிவாகமம் சிறப்பு நூலென்று மிதனு லறிந்தாம். இவ்வேத சிவாகமங்கள் பரஞானமாகிய சிவஞானத் தின்கண்ணின்று உற்பவித்த அபரஞானங்களாம். ஏனைச்சமயத் தார் கூறும் சாத்திரங்கள் யாவும் சமுத்திரகலச நியாயம்பற்றி இவ் விருவகை முதனூல்களினின்றும் ஏகதேசமாய் எடுதது அறிவிப்பன வாம். ஆதலால் சோபான முறையில் எல்லாச் சமயங்களையும் எடுத்துக்கூறு மேலான சமயமிதுவெனக் காட்டலால் இவ்வேத சிவாகமங்களுக்குள் சகல சாஸ்திரங்களும் அடங்கும். பதிசேர் முத் திகள் பலவற்றையுங் கூறிவிடுத்து மேலான சிவசாயுச்சியத்தை வே தம் சிவாகமங்கள் நன்கு சித்தாந்தஞ் செய்வதால் நமது சித்தாந்த சைவம் வைதீகசைவமென்று அழைக்கப்பெற்றது. இவ்வைதீக சைவமாகிய சித்தாந்தத்தைப் பூர்வபக்ஷம் பண்ணும் சமயம் வேறு இல்லாதநினாலே இதுவே மேலான சற்சமயமாம்.

அநாதியே பாசங்களின்று நீங்கின ருஷிகள் சிவனிடத்தில் நின் றும் இவ்வேத சிவாகமங்கள் வாக்குப்பிரபஞ்சமாய்ப் புறப்பட்டன. அவற்றை ஒருவராலுந்தரிக்க முடியவில்லை. ஆனால் மஹாசதாசிவ தேவநாயனார் அதனைத்தரித்தனர். பின் ஆன்மாக்களுய்யும்பொருட்டு சிருஷ்டிகாலத்தில் தமது ஐந்துமுகத்தினின்றும் வேதசிவாகமங்களை வெளிப்படுத்தினர். இவ்விருவகை முதனூல்கள் தவிர ஏனைய நூல் களெல்லாம் இவையிரண்டினின்றும் விரிந்த நூல்களாகலின் இவ்வி ருவகைநூலுமே நூலென்று உயர்த்திக் கூறப்படுவனவாம். இவ ற்றுள் வேதம் சூத்திரம் போன்றது. சிவாகமம் பாடியம் போன் றது. சூத்திரம் பலவாறு பொருள் கொள்ளப்படுமாதலால் அவ் வாறு கொள்ளாது தெளித்து இதுதான் உண்மைப் பொருள் என்று கூற வந்தன சிவாகமங்கள். வேதத்திற்கூறும் கருமகாண்டப் பொருள்களுக்கு இன்றியமையாது வேண்டப்பட்டு மிஞ்சி நின்ற பொருள்களையும வேதாந்தமாகிய உபநிடதத்தின் சாரமாயுள்ள பொ ருள்களையும் வேறு எடுத்துக்கொண்டு இனிது விளக்குவது சிவாகம மாதலின், வேதத்தின் பூருவபக்கப் பொருள்களைச் சொல்லும் நூல்க ளெல்லாம் பூர்வபக்க நூல்களெனவும் அதன் சித்தாந்தப்பொருளைச் சொல்வதாகிய சிவாகமம் சித்தாந்த நூலெனவுமாம்.

இவைகள் பெருங் கருணைவள்ளலாகிய இறைவன் உலகத்தா ருய்தற் பொருட்டும் சத்திநிபாதமுடையார் உய்தற்பொருட்டும்

திருவுளத்திற் கருதிச் சொல்லப்பட்டவைகள்.

இதுகாறுங் கூறியவாற்றால் சிவாகமங்களை வேதமுடிபு கூற வந்த சித்தாந்த நூல்கள் என்றறிந்தாம்.

இச்சித்தாந்த சமயமே மிக மேலான உண்மை நெறியாய் விளங்கி எடுத்த இச்சென்மத்திலேயே முத்திதர வல்லதாயிருந்த அதனைக்கருதி அவ்வழி யொழுகமுயலாது வீணே காலம் போக்குதலால் வரும் பயனென்னை? இதுபற்றியன்றோ? அருணந்திசிவாசாரியசுவாமிகளும் சிவஞானத்தைச் சித்திக்கச் செய்தலால் சிவஞான சித்தியார் என்று அழைக்கப்பெற்ற உண்மை நூலில்

"சித்தாந்தத் தேசிவன்றன் றிருக்கடைக்கண் சேர்த்திச்
செனநமொன்றி லேசீவன் முத்தராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தாநந் தம்பொழிந்து வருமபிறப்பை யறுத்து
முத்தாந்தப் பாதமலர்க்கீழ் வைப்ப னென்று
மொழிந்திடவு முலகரெல்லா மூர்க்கராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரிதுவென்ன பிராந்தி."

என விதந்தெடுத்துக் கூறுவாராயினர். இதனை யறியாத மூர்க்கர்கள் இப்பொய் மாயவாழ்க்கையில் மயங்கித் திரிவாராயினர். அம்மட்டோ! பசு சாத்திரங்களிற் பிரமைகொண்டு சித்தாந்தத்தை நிந்தித்து ரௌரவ முதலிய நரகத்துக்காளாகி மீளவும் ஜனனத்துக் கேதுவாகின்றார்கள்.

சைவசமயத்துட் பிறக்கும் பெரும் பேறுடைய நாம் அதனைக் கைவிட்டு மற்றொரு சமயம் புகுதக் கருதல், பாற்கடலிற் பிறந்த மீனகள் அப்பாலினையுண்ணாது புறக் கடலிற்சென்று ஆங்குள்ள அழுக்கினைத்தின்ன லொக்கும். ஆதலால் நமக்கு இப்பொழுது வாய்க்கப்பெற்ற இம்மானுடதேக மிருக்கும்போதே சித்தாந்த நெறி நின்றொழுகி என்றும் மீளாமுத்தியிற் சிவாநந்தத்தை யநுபவிப்போமாக.

அவ்வாறு கூறவந்த 28 சிவாகமங்களையும் அவைகளின் வழித்தாய்வந்த உபாகமங்களையும் பின்பல சிவாசாரியர்களால் முன்னொடு

பின் மலைவற எடுத்துக் கூறிய சார்பு நூல்களையும் நாம் ஆதரியாது கைவிடில் நமது சைவசித்தாந்தம் நம்முடைய நாட்டில் எவ்வாறு நிலைபெற்று நிற்கும்? ஒவ்வொரு வருடத்தினும் அநேக ஆகம கிரந்தங்கள் கறையானுக்கும் இரண்டாவது பூதத்திற்கும் இரையாகிப் போவதை யாம் கண்கூடாய்க் காண்கின்றோம். இன்னும் சிலகாலஞ் செல்லில் இவ்வாகமப்பிரதிகள் எல்லாம் சூனியதசை யடைந்து விடுவனவாம். அப்படியடையில் பின் நமது சித்தாந்தம் ஆதாரவற்றுப்போய்விடும். ஆதலால் அறிவிற் சிறந்த பெரியோர்களே! விலைக்கு வரக்கூடிய ஆகமப் பிரதிகளைத் தகுந்த விலை கொடுத்து வாங்கியும் அவ்வாறு வரப்பெறாதவைகளை எழுத்தாளர்களைக் கொண்டு எழுதுவித்தும் மதுரைமாநகர்போன்ற பெரியஸ்தலத்தில் அவைகளை ஒருங்கே சேகரித்து வைத்தல் மிக மேலான சிவபுண்ணியமாம். பின் அவைகளை வெளியிட வேண்டியதற்குத் தகுந்த உபாயங்கள் தேடி வெளியிடில மிக்க நலம். உங்களிற் சில கனவான்கள் இவ்வாறு செய்ய வேண்டுவதற்காகப் பெருமுயற்சிகள் செய்து வருவதைக் கேள்வியுற்று மகிழ் வெய்தினம். இறைவன் றிருவருள் புரிக.

மேற்கூறிய வேத சிவாகமங்களின் உண்மைப் பொருள்களை உள்ளவாறே தோத்திர ரூபமாய்க் கூறும் தமிழ் வேதங்களாகிய தேவார திருவாசகாதிகள் சிவாகமங்களின் ஞானகாண்டப் பொருளைச் சுருக்கித் தெளிவுறக் கூறும் நமது சைவசித்தாந்த நூல்கள். தேவார திருவாசகாதி உண்மைநூல்களின் நுண் பொருள்களைஆராயத் தலைப்படவேண்டும். அவைகளுக்கு அநேக வியாக்கியானங்கள் பெரியோர்களைக் கொண்டு எழுதிவைத்தல் வேண்டும். பண்ணிலக்கணம்நமதுபண்டையார்காலந்தொட்டுக்கைநெகிழ்ந்துபோய்விட்டது. ஆயினும் அப்பண்களைப்பற்றி இசை மரபு, பரதசூடாமணி, சங்கீதரத்நாகர முதலிய நூல்களில் சொல்லப்பட்டனவற்றை யாவது ஒருங்கே சேகரித்து வெளிப்படுத்தல் வேண்டும். என்னெனில், இப்பொழுது தத்தமக்கு இசைந்த ராகங்களிலெல்லாம் தேவாரத்தை அமைத்துக் காதுக்கினிய கீதத்திற் பாடுவாராயினர். அவ்வாறு தமிழ் வேதத்தைப் படிப்போர் கேட்போர் மாட்டும் பாவமுறுமாதலால் அதனையறவே விட்டொழிதல் வேண்டும்.

இஃது இங்ஙனமாக ஆன்றோர்களால் நமக்கு ஓர்விழுநிதியென கேஷமித்து வைக்கப்பெற்ற மெய்கண்ட சாத்திரஙகள் பதினான்கினைத் தழுவிச் செய்யப்பட்ட அரிய பெரிய நூல்கள் நூற்றுக்கணக்காயுள்ளன. அவைகளும் க்ஷீணகதியடைந்து கொண்டே வருகின்றன. இந்நூல்களெல்லாம் அழிந்துவிட்டால் திரும்பவும் நமக்கு இத்தகைய நூல்கள் செய்து தருவார்யாவர்? அந்தோ! போனவை போனவைதான்.

புதிதாய் நூல் செய்ய முடியாத இக்காலத்தில் கிடைக்கக்கூடிய நூல்களைச்சேகரித்து வைப்பதினும் யாம் பின்னிடலாமா? அன்பர்களே! உங்கள் உள்ளத்தின் கண்ணே ஓர்ந்து பாருங்கள். அவ்வாறு சேகரித்து வைப்பதையே தொழிலாய்ப்பூணுங்கள். சிவஞான கோசங்களைச் சேகரித்து வைத்துப் பயன்படுத்தல் மிக மேலானசிவ தருமமென்று சிவதருமோத்தர முதலிய உண்மை நூல்கள் கூறுகின்றன.

மேற்கூறிய உபாயச் சிவபுண்ணியங்களிற் சிலவற்றையும் உண்மைச் சிவபுண்ணியங்களிற் சிலவற்றையும் உங்களில் அநேகர் பல் ஆண்டுகளாகக்கையாண்டு வருகின்றார்களென்பது உலகப் பிரசித்தமே.

தற்காலத்தில் நாட்டுக்கோட்டை நகரவாசிகளில்லையேல்,

(1) மிக க்ஷீணகதியடைந்த புராதன ஆலயங்களைப் புதுக்குவித்து அட்டபந்தனங்கள் செய்வார் யார்?

(2) சிவபெருமானுக்குப் பஞ்சகௌவியம் ஆட்டும்படி பசுப்பிறை கட்டுவார் யாா?

(3) எம்பிரானுக்குப் பூமாலை சாத்தற்குரிய நந்தவனம் வைப்பார் யாா?

(4) சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளிய வடமொழிவேதத்தைப் பயிற்றுவிப்பார் யார்?

(5) இறைவன் அன்பர்கள்மாட்டு ஆவேசித்து நின்று சொல்லியருளிய தென்மொழி வேதத்தைத் தெரிவிப்பார் யார்?

(இன்னும் வரும்)

எஸ். பால்வண்ணமுதலியார்.

# "கற்பு"

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற குற்றாலப் புராணகாரர் கூற்றின்படி தன்புருஷன் வரு முன்னரே யவர்க் கறுசுவை யமுதமளித்தற்குத் தயாராகக் காலத் திற் சமையல் முதலிய வேலைகளைப் புரிந்துடனுராமுதளித்து அவர் நித்திரை கொண்டபின் தான் கண்வளர்ந்து அவரெழு முன்னர்த் தான் முன்னெழு நியதியுடையவளாய் விருந்தினரை யுபசரித்தல் முதலிய கலப்பாடுடையவளாய் விளங்கல் வேண்டும்.

தன்னுயிர்நாயகன் பொருளீட்டல்முதலியன கருதிப் பிறதொ லை விடங்கட்குச் சென்ற காலத்திற்றான் றன்னணியாடை முதலிய வற்றாற் பெருமித வழகு செய்யக் கருதாது கற்பழகே பூண்டவளா க விளங்கல் வேண்டும்.

தன்புருஷன் ஏதாவது கோபமுதலியவற்றாற் கடூரமாகப்பேசி னும் "பெண்டிர்க் கழகெதிர் பேசாதிருத்த" லாதலின் பொறுமை யோடு மிருந்து பின்னர்த்தக்க காலத்திற் சமாதானங்கூறவேண்டும்.

தன்வீட்டைவிட் டயலார் வீடுதோறும் வீண்வார்த்தையாடச் செல்லுமங்கையர் முகத்தைக் காணுவதற்கு நாணமுடையவர்களா ய்த் தன்காதலன் யாதாமோர் காரியத்தைச்செய்து முடியென்றவுட னேயே மறுதுசெய்து முடிக்கவேண்டும்.

கொழுநனே தெய்வமெனக் கொள்ளுங் கோதையர் அவனுத் தரவின்றித் திருவிழாக் காணச் செல்லுதலும் நோன்பு முதலிய விர தானுஷ்டானங்களை மேற்கொள்ளுதலும் தீர்த்த யாத்திரை செய்த லும் தெய்வப்பிரார்த்தனை செய்தலுங் கூடாவாம்.

தானணியு மாபரணங்களைத் தன்மணமகன் மாற்றுட்கிய நேர் ந்த காலத்திலு மதற்காகத்தான் கொஞ்சமும் மனவருத்தங்கொள் ளாது எஞ்ஞான்றும்போன்றன்புடன் குடும்ப நிர்வாக விஷயத்திற் கருத்துடையவளா யிருக்கவேண்டும்.

இக்காலத்து நவீனஸ்திரீகள் போன்று கூசாது தன் பர்த்தாவி னுமத்தைச் சொல்லாதவளாய்த் தன்னாயகனுக்கு மரியாதை முத

லியன செய்து அவராசனங்கொண் டமர்ந்தபிற்பாடே தானமர்ந்திருப்பவேண்டும்.

தன்கணவ னழகில்லாதவனுயும் வயோதிகனுயுங் குட்ட முதலிய கன்மரோய்கொண்டவனு யிருந்தாலுங்கூட அவைகளைப் பற்றியாவது மற்று மவனுடைய குறைகளைப்பற்றியாவது தூற்றித்திரியும் கூற்றுக்குச் சமானமான பெண்டிர்களைப்போலல்லாமல் தன்பிராணநாயகனுக்குக் காலாகாலத்தி லியற்றவேண்டிய பணிவிடைகளைப் புரிந்து பேணல்வேண்டும்.

ஸ்திரீயானவள் பூப்புற்ற மூன்றுநாளும் புருஷன்முகத்திற்றென்படாது யாதுங்கூறாது மறைந்துறைந்து நீராடியபின் னீராறுநாளுங் கருவயிற்றுறுங் காலமாதலி னவரைப் பிரிந்திராது சுகதுக்கங்களை யொருங்கே யனுபவித்தல்வேண்டும்.

ஸ்திரீக ளெவ்விடத்திற்குஞ் சரியான துணையின்றிப் போகாதவர்களாகப்பர்த்தாவழைத்த அக்ஷணமே யாது கருமமாயிருந்தாலுங் கவனியாது வள்ளுவர் மனைவி வாசுகியார்போன்று விருப்புடன் சென்று பொறுப்புடன் மொழிவது கேட்டுப்புரிவது வேண்டும்.

ஸ்திரீ தனக்குரிய பெற்றோர் பிள்ளைகள் முதலிய எல்லாப்பொருளிலும் விசேஷமானதும் கிடைத்தற்கரியதுமான புருஷனை யன்புடன்பேணி திருவகலுதற்குக் காரணமாகிய குற்றங்களைச்செய்யாது அம்ஸ்தாவதுஉர லம்மி யுலக்கை முறம் வாசற்படி முதலியவற்றின் மேல் வீற்றிராதவளா யிருக்கவேண்டும்.

இங்ஙன மேற்கூறியாங்கொழுகிய தெய்வக்கற்புடைய மாதுசிரோமணிகளிற் சிலரின் சரிதத்தையுஞ் சிறிதாராய்வாம்.

1. வசிஷ்டமுனிவர் மனைவியாகிய அருந்ததியென்பாள் தன்புருஷனிடத்தி லன்புடனியற்றிய தொண்டுகளைக்கண் டதிசயித்த கணவன், இன்னுயிர்க்காதலி! உனக்கு வேண்டுவ கேள். தருகிறேனென, மனைவியும் வேறொன்றையும் விரும்பாது தன்பர்த்தாவிடத்தி லதிபக்திசெலுத்தி மேற் பரமபதமடைதற்கான உபதேசங்களைப் போதிக்கும்படியாகக் கேட்டவற்றுற் பர்த்தாவுக் கியற்றுங் கருமத்தில் கொஞ்சமுங் குறைவற்றுக் கற்பிற்சிறந்து விளங்குவதைத் தேவ

ஸ்திரீகள்முதலியோர்க்கு விளக்கநினைத்த நாரதமுனிவர் திரிமூர்த்தி ஸ்திரீகளாலும் கல்லைக் கடலையாக வறுத்தளிக்க முடியாமற்போனதை யருந்ததியம்மையாரிடம் வறுத்துக்கேட்க அவர்களுங் கணவனையுந் தெய்வத்தையுந் தியானித்து அப்படியே வறுத்துக் கணவன் முதலிய பலருங் கண்டுகளிக்கச் செய்தமையால் அவர்களின்கற்பின் மகத்துவமு மதினாலென்றுமழியாத கீர்த்திவாய்ந்து விளங்குவதும் நாமெல்லாரு மறியாததன்றே?

தனதத்தனார் மகளும் பரமதத்தனார் மனைவியாருமாக விளங்கிய ஸ்ரீ காரைக்காலம்மையார், தனது கணவனனுப்பியிருந்த இருமாங்கனிகளிலொன்றைத் தன்னாலுபசரிக்கப்பட்டன்ன மளிக்கப்பட்ட சிவனடியாரொருவர்க் கன்பின் முதிர்ச்சியா லளித்துவிடப் பின்னர் கொழுந னமுதுண்ணுங்காலை யெஞ்சிய வொன்றையுமுதவ அதனுருசி கண்ட காதலன் மற்றொன்றையுங் கொண்டு வரும்படியாகக் கேட்க அம்மையார் செய்வதறியாது சிவபிரானைத் தியானித்தொருசிறந்த கனிபெற்றதை யுவந்தளிக்கப் பின்னதனுருசி பதின்மடங் கதிகமாயிருப்பதறிந் ததிசயப்பட்டிக் கனியேதென்ன, நடந்த விருத்தாந்தத்தைக் கூறக்கேட்ட கணவனின் சந்தேகத்தை நீக்கக்கருதி மற்றொர்கனியுஞ் சிவபிரானருளாற் பெற்றுதவியதைக்கண்ட கணவன் றன் மனைவியின் றெய்வத்தன்மைக் கஞ்சி இவளாலினிப் பணிவிடைகொள்ளலாகாதென்றெண்ணி வேறோரிடத்தில் மனைவியார் முதலியவருணராதவித மிரண்டாவதாக மனைவி யொருத்தியைக் கொண்டு மகப்பெற்றுவாழ்வதறிந்த தனதத்தனியர் பெண்மணியாகியகற்பிற்சிறந்த காரைக்காலம்மையாருடன் பரமதத்தனிடஞ்செல்ல அவர் தன் மூத்தமனைவியைத் தெய்வமாகக் கருதி வணங்கியதைக்கண்டு கேட்ட சுற்றத்தார்களுக்கு அம்மையின்றெய்வத்தன்மையை விளக்கி யவரையும் வணங்கச்செய்து நின்ற தன் புருஷனின்றன்மையைக்கண்ட காரைக்காலம்மையாரினி இவற்காகத்தாங்கிய தன்னழகுபொருந்திய தசையைக் கழித்துத் தனக்கு ஏற்புடம்போடுகூடிய பேய்வடிவம் சிவபிரானிடம் வேண்டிப் பெற்றுப் பின்னர் பரபத்தியாற் பொது நடம்புரியும் புண்ணியன் பூங்கழலடிக்கீழுறையும் பேற்றைக்கற்பின் மகத்துவத்தா லடைந்ததையும் பூலோகத்தா ரறியாததன்றே?

திருத்தொண்டரிற் சிறந்த இயற்பகை நாயனார் சிவனடியாரைச் சிவனெனவே மதித்து அவர்கள் வேண்டியவற்றை மறாதளித்து வருந்தன்மையையும், பக்தியையும் உலகத்தார் கண்டுய்யும் பொருட்டுப் பரமேசுவரனே தொண்டர் வேடங்கொண்டு நாயனாரிடஞ்சென்று உனது மனைவியை எனக்குத் தருகவென, நாயனாருந் தன்னிடத்திலுள்ள பொருளையே கேட்டதற்குவந்து,

"விதிம ணக்குல மடந்தையின் றனையிம் மெய்த்தவர்க்குநான் கொடுத்தன னென்ன, மதுமலர்க்குழன் மனைவியார் கலங்கி மனந் தெளிந்தபின் மற்றிது மொழிந்தார்."

"இன்று நீரெனக் கருள்செய்த திதுவே
லென்னு யிர்க்கொரு நாதநீ ருரைத்த
தொன்றை நான்செய்யு மத்தனை யல்லா
லுரிமை வேறுள தோவெனக் கென்று
தன்ற னிப்பெருங் கணவரை வணங்கத்
தாழ்ந்து தொண்டனார் தாமெதிர் வணங்கச்
சென்று மாதவன் சேவடி பணிந்து
திகைத்து நின்றனள் திருவினும் பெரியாள்"

என்றபடி மனைவியாரைத் தொண்டர்க்களித்துத் தாமெனவணங்கிப்பின்னர் சிவபெருமானால் கற்பின்றிறம் வியக்கப்பட்டிருவரும் பரமுத்தியடைந்தது மறியாதார் யாரே? தெய்வப்புலமைத் திருவள்ளுவர் மனைவி வாசுகியாரன்புடன் கணவன் சொல் மறாது கிணற்றிற் றண்ணீர் மொண்டுகொண் டிருக்கும்பொழுது அப்படியே விட்டுவரக் குடமங்ஙனமே பாதிக்கிணற்றி னின்றதும், தூக்கின உலக்கை அந்தரத்திலேயே திரும்ப வந்து பற்று மட்டும் நின்றதும் பழஞ்சாதஞ் சுடுசாதமாக மாறியதற் கிணங்க விசிறப்பட்டதும் பிறவும் அவ்வம்மையாரின் றெய்வக்கற்பினை விளக்குவதன்றோ?

(இன்னும் வரும்.)

பி. சிதம்பர புன்னைவனநாதன்.

# செய்ந்நன்றியறிதல்.

(18-ம் பக்கத் தொடர்ச்சி.)

நன்றிமறவாமை யொன்றையே பொன்றாச் செல்வமாகக் கருதியகர்னன், தன்றாயை நோக்கி, அன்னே!

“மடந்தைபொற் றிருமே கலைமணி யுகவே மாசறத் திசழுமே காந்த, விடந்தனிற் புரிந்தே நானயர்ந் திருப்ப வெடுக்கவோ கோக்கவோ வென்றான், றிடம்படுத் திடவே லிராசரா சனுக்குச் செருமுனைச் சென்றுசெஞ் சோற்றுக், கடன்கழிப் பதுவே யெனக்கினிப் புகழுங் கருமமுந் தருமமு மென்றான்” என்று கூறியிருப்பதாக நாம் அறிகின்றோம். செயிரறுதம் உயிரளித்துஞ் செய்ந்நன்றிக்கடன் கழிப்பவரன்றோ? உத்தமர்கள். சீலமுடையவர்கள் கீர்த்திவாய்ந்தவர்கள் எனப் பல்லோராலும் பாராட்டப் பெறுவார்கள் நிற்க, பண்டைக்காலத்து அரசர் முதலாயினார் வித்துவான்கட்குப் பரிசிலாக, யானை, குதிரை, தேர், நாடு இவை முதலான பலவற்றையும் உதவி வந்ததாகவும் வித்துவான்களும் சமயம் நேர்ந்த வழித் தம் மாலியன்ற உதவியைத் தாம் அவர் செய்த நன்றியை மறவாமைக்கு அறிகுறியாக அவ்வுபகாரிகட்குச் செய்து வந்ததாகவும் பண்டைச் சரிதங்களா லறிகின்றோம். வேள்-பாரி என்ற வள்ளலின் பொருட்டு, கபிலர் என்னும் புலவர் பெருமானும், செவ்விய தமிழ்தேரவ்வைப்பிராட்டியும் புரிந்த நன்றியைச் சுருக்கிக் கூறுகின்றேன். இதன் விரிவை வேளிர் வரலாறு என்னும் நூலுட்காண்க.

சிறுவீமுல்லைக்குப் பெருந்தேர் நல்கிய பறம்பிற் கோமானாகிய பாரி என்ற மாரியன்ன வரையாவீகைவள்ளல், யாரினும் புகழாற் சிறப்புற்றோங்கியமைக்கு அழுக்காறுற்றுத் தமிழ்மூவேந்தரும் ஒருங்குசேர்ந்து படை யெடுத்துச்சென்று; வேள்-பாரியது மலையரணை நெடுங்காலம் முற்றுகைசெய்ய இவனுக்குஉயிர்த்துணைவராய்நின்ற கபிலர் என்னும் புலவர் பெருமான் கிளிகளை வளர்த்துவிடுத்து அரணுக்கப்புறத்தே விளை நிலங்களிலுள்ள நெற்கதிர்களை நாளுங்கொணரச்செய்து ஆங்கிருந்த குடிபடைகளை அருத்திப் போராற்றளரா வண்ணம் பாதுகாத்துப் பின்னருஞ் சிலசூழ்ச்சிகளால்வேள்பாரிக்கு மூவேந்தருந் தோற்றோடும்படி செய்தார் எனவும், சிலகாலஞ்சென்ற

பிறகு வேள்-பாரி விண்ணுலகம் விழைந்துசெல்ல அவன் பிரிவுக்கிரங்கி ஆற்றொணுத் துயரங்கொண்டு அவனருமை மகளிரிருவரையும் பாதுகாத்தற்குரிய பிறரொருவரு மின்மையால், தாமே பறம்புநாட்டினின்றும் அவரிருவரையும் அழைத்துச்சென்று இளவிச்சிக்கோ இருங்கோவேள் என்னு மிருவர்பாலும் அடைந்து இம்மகளிரை மணம்புரிந்து கோடல்வேண்டுமென அவர்மீது கவிதைபாடி வேண்டினர் எனவும், இருவரும் மறுத்தமைக்குக் கவன்று, தமக்கினியபார்ப்பார் சிலர்பால் ஆதரித்து வரும்படி விடுத்துத்தாமும் அப்பாரி சென்ற இடத்திற்கே சென்று சேர்ந்தார் எனவும்;

இவற்றையுணர்ந்த வவ்வமில் சீர்த்திசே ரவ்வைப்பிராட்டியார் வேள் பாரியால் முன்னர் அபிமானிக்கப் பெற்றவராதலின், மேனிகழ்ந்தமைக்கு மனநொந்து, அவன் மகளிரிருவரையுந் திருக்கோவலூரின்கட்சென்று காண விரும்பி அவணுற்று அவர்களாலுபசரிக்கப்பெற்று மகிழ்ந்து அவ்வூரின்கணிருந்த தெய்வீகனென்னும் அரசனுக்கு அப்பாரிமகளிரிருவரையும் மணம்பேசித்தமது கவிவல்லமையால் மன்றலுக்குரிய வெல்லாந் திரட்டி மணவினை சிறப்பச்செய்து முடித்தார் எனவும் அறியப்படுதலால் முன்னோர் சென்ற நன்னெறியே நன்னெறியாம் எனக்கோடல் வேண்டும்.

இன்னும் கல்வியிற் பெரியராயகம்பர் வெண்ணைநல்லூர்ச்சடையனென்பானைத் தாம்பாடிய இராமாயணத்து இடையிடையே புகழ்ந்து கூறியிருப்பதும், புகழேந்தியார் தாம்பாடியநளவெண்பாவின் இடையிடையே சந்திரன் சுவர்க்கியென்பானைப் புகழ்ந்து கூறியிருப்பதும், தமக்கு அவர்கள்செய்திருக்கும் நன்றிமறவாமையை உணர்த்துகின்றதன்றோ?

பிறராற்றமக்கு ஆகவேண்டிய காரியங்களைவையேனுமிருப்பின் அவை ஆந்துணையும்அவர்க்கு ஆவனகூறிக் காரியமுடிந்துழிக் கை யகன்று செல்வர். இத்தன்மையோரது படிற்றொழுக்கங்கண்டு அவரோடு கலந்து நிற்கின்ற பஞ்சபூதங்களுந் தம்முள்ளே நகுதலை அறியார்போலும். பிறரை வஞ்சித்தொழுகுவோர் மதியிலிகளே யாவர். இவர்களை எங்குந்நிறைந்த கடவுளறிந்து நிச்சயமாய்த் தண்டிப்பர்.

தாயைப்போலவே தந்தையுங் குழந்தைகள் கருத்தறிந்து வேண்டுவன ஈந்து மகிழ் வூட்டி வளர்த்தல்பற்றி, தாயை முதலிலுந் தந்தையை அதன் பின்னரும் வைத்து "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வ"மென்றார் நம் மூதாட்டியாரும்

தந்தைசொற் கடவாத மைந்தனே மேலானவன்.
அவர்மன முவப்ப நல்லனசெய்வோனே தருமவான்.

பீஷ்மாசாரியரைப்பற்றி ஆலோசிக்குமிடத்து பிதுர்பக்தியிற் சிறந்தவரென்பது நன்கு விளங்குகிறது. எதனால் எனின், தம்பிதாவாகிய சந்தனு என்பார் மச்சகந்தி என்பாளை வேட்டு வருந்த அவ்வருத்தத்தைத் தணிவிக்கும் பொருட்டு அவளைத் தந்தைக்கு மணமுடிப்பித்து அவளைவளர்த்து வந்த கடற்புறத்தரசன் வேண்டுகோட்படி இவ்வுலகத்தைத் தாமாளுவதில்லையென்றும் பிற உலக சுகங்களும் வேண்டுவதில்லையென்றும் பிரதிக்ஞை செய்ததினால். நிற்க. விலங்கின் பாற்பட்டதாகிய நாய் தனக்கு உணவுமட்டுங்கொடுத்து ஆதரித்துவரும் தன்யஜமானன்வீட்டை இரவும்பகலும்அன்னியர்வந்து உள்ளே புகுதவொட்டாமற் காத்தும் யஜமானன், அடிப்பினும் உதைப்பினும் இன்னும் எவ்வகைப்பட்ட உபத்திரவங்களைச் செய்யினும் அவற்றை யெல்லாம் பொறுத்து யஜமானனிடத்து அன்பு செலுத்தி வாலாட்டியும் நன்றி மறவாது நிற்பதை நன்கறிந்த நாம் பிறர் செய்த நன்றியை மறத்தல் அழகு பயக்குமா?

தம்மை ஆதரித்துவரும் யஜமானனுக்குத் தாம் யோக்கியர் போல நடித்துக் காட்டி அவன் நம்பி எல்லாவற்றையுந் தம்மிடத்து ஒப்பித்துவிட, சமயம் பார்த்து அவ்வெல்லாவற்றையுந் தமதேயாக ஆக்கிக்கொள்ளக் கருதுவாருஞ்சிலருளர். இங்ஙனவு ஓ! ஓ! கொடிது கொடிது.

"மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தா
லூனமிகும் பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மா
லானபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ" என்றபடி

எல்லாவச்சமும் போக்கி மேலும் தந்தி, ரயில், தபால் முதலான

பலஜன சௌகரியங்களையும் ஏற்படுத்தி நம்மை ஆண்டுவரும் இங்கிலீஷ் துரைத்தனத்தார்க்கு நாம் என்றும் நன்றியறிவுள்ளவர்களாதல் வேண்டும்.

பசித்தவருக்கு அன்னங் கொடுத்தலும் நீர்வற்றிய குளத்திற்குத் தண்ணீர் கொண்டுவந்து பெருக்குதலுஞ் சிறந்தனவாதல்போல பிறர்பால் உதவியைப் பெறவேண்டுமென்ற விருப்பமுள்ள ஏழைகட்கு உதவிசெய்தலே சிறப்புடைத்தாம். சிறிது பொருள் தரினும் வறிஞர் தந்தகுதிக்கு அப்பொருள் மிகப் பெரிதெனக்கொண்டு மகிழ்வர். உதவி செய்தவரையும் மறவார்.

ஓராசிரியர்பாற்கல்விகற்ற மாணாக்கன் அவ்வாசிரியர்க்கே தீங்குசெய்ய நினைத்தல் கொடும்பாதகமாம். சித்தன் என்னும் மாணவனொருவன் ஓராசிரியரிடைச் சென்று வாட்போர்பயின்று வல்லனாகித்தானும் அக்குருவுக் கெதிரியாய் ஓர் விஞ்சைக் கூடமமைத்துத் தன்னாசிரியர் வருமானத்தை யெல்லாங் குறைவுறச்செய்ததுமன்றி அவர் மனைவியையுங் கற்பழிக்கத் துணிந்தான். இதனையுணர்ந்த சோமசுந்தரப்பெருமான், செய்ந்நன்றி மறந்து தீங்கிழைத்த சித்தனெனு மிப்பாதகனைக் கொல்ல நினைந்து எழுந்தருளி வந்து சித்தனைநோக்கி,

"குரத்தியை நினைத்த நெஞ்சைக் குறித்துரை நாவைத் தொட்ட
கரத்தினைப் பார்த்த கண்ணைக் காத்தனை கோடி யென்றென்
றுரைத்துரைத் தவறுக் கெல்லா முறைமுறை தண்டஞ் செய்து
சிரத்தினைத் தடிந்து வீட்டித் திருவுரு மறைந்து நின்றான்."

என்பதாகத் திருவிளையாடற் புராணம் அங்கம்வெட்டின படலத்துக் கூறியிருப்பதை அறிகின்றோம்.

எவ்வாற்றானும் ஆராயுமிடத்து நன்றி மறப்பது நன்றன்றாகலாற் பிறர்செய்த நன்றியை ஒருபோதும் மறத்தல்கூடாதென்பதனை யாவருஞ் சிந்தித்தல்வேண்டும்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று."

ரெ. இராமமூர்த்தி ஐயர்.

# பாஷையின் தோற்றம்.

(உக-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

பாஷை யென்பது யாது?

பாஷையென்பது தன் எண்ணக்கருத்தைப் பிறருக்குவெளியிடும் கருவிகளில் முதன்மைபெற்றது. இம்மாதிரி சரீரசேஷ்டைகள் பல வாறாக உதவினும் அவைகள் ஒளியல்லாவேளைக் குதவா; காலஞ்சென்றால் காணப்படா, வெகுதூரத்திற்றோன்று; ஆதலால் ஓர் பாஷையின்றி இக்கருத்து வெளியிடுதல் எளிதிற்கூடாது. ஆதலால்பாஷை அனைவர்க்கும் இன்றியமையாதது. இப்பாஷை ஆதியில் ஒலிவெழுத்தாகவே அமைந்திருந்தது. பாஷை என்ற பெயரும் (பாஷ்) என்ற வடமொழிப்பகுதியிலிருந்து வந்தது. (சொல்லப்படுவது என்பது பொருள்) ஆகையால் இப்பெயர் இதற்கே தகும். ஆயினும் முற்காலத்துப் பெரியோர்கள் திருவுளத்திலுதித்த நல்ல அபிப்பிராயங்களை நாம் எளிதில் அறியக்கருவியாய் நின்றது வடிவெழுத்தே யாகையால் இது நமக்கு வெகு உபகாரஞ்செய்ய வல்லமையுடையது. இதுகற்பகம்போல் கற்பவர்க்கு “அறம் பொருளின்பம் வீடும்பயக்கும், புறங்கடை நல்லிசையுநாட்டும்—உறுங்கவல் ஒன், றுற்றுழியும் கைகொடுக்கும் கல்வியினூங்கில்லை, சிற்றுயிர்க் குற்ற துணை” என்றபடி கருதிய பயன்களைக் கொடுக்கின்றது.

பாஷையினால் நாம் அடையவேண்டிய எல்லாப்பயன்களும் பெறுவதற்குவேண்டிய அம்சங்கள் நான்கு. அவையாவன:

(1) நாம் அறியக்கூடிய பொருள்கள் எல்லாவற்றையு முணர்த்தும் வல்லமைபெற்ற சொற்கள். (இவைகளே சிலாக்கியமெனப்படுவன.)

(2) காலங்களும் தேசங்களும் வேறுபடினும் முன்னோர் வழக்கத்துக்கிணங்கி அவர் எழுதிய புஸ்தகங்களைப் படிக்கவும் அவைகளின் கருத்துகளை அறியவும் பாஷைகள் வேறுபடாதிருக்கவும் வேண்டிய விதிகள். (இதுவே இலக்கணமெனப்படும்.)

(3) இம்மையிற் பெறவேண்டிய சுகங்களைப் பெறுவதற்கு சாதனங்களாகிய சிற்பம் முதலிய பிரத்தியக்ஷசாஸ்திரங்கள். (இவை விஞ்ஞானநூல்களெனச் சொல்லப்படும்) விஞ்ஞானம்—நூலறிவு.

(4) ஒருவன் ஸம்ஸாரதுக்கம் நீங்கிப் பேரானந்தமடையவேண்டுதற்குரிய மெய்ப்பொருளை விளக்கும் நூல்கள். (இவை ஞானநூல்களெனப்படும். ஞானம்—மெய்யறிவு.)

இவ்வறிவைக்கொண்டு எல்லாப் பிரயோஜனங்களையும் அடையலாம். ஆயின் மனதில் ஓர் சங்கதியுதிக்கும்பொழுதே பாஷாஞானமில்லாதவர்களுக்கும் அதற்குரிய பெயருடனே உதிக்கிறதே உதாரணமாக "இன்று காலையில் எழுந்து நமது வேலைகளைச் சீக்கிரம் முடிக்கவேண்டும். சமாஜத்திற்குப் போகவேண்டும்" என்பதுபோன்றபேசும் சப்தங்களும் எழுதும் எண்ணங்களும் எண்ணப்படி வேறுபடுகின்றதே. இஃதெங்ஙனமென்ற வினா ஒன்று தோன்றும். இதனை அடியிற் காட்டப்படும் திருஷ்டாந்தத்தால் தெளியலாம். குழந்தைகளுக்குப் பாஷையறிவு இல்லாமற் போனபோதிலும் அவர்களுக்கு எண்ணங்கள் தோற்றுவதை ஆலோசிப்பதே சான்றாகும். மிருகங்களும், பறவைகளும், ஊர்வனவும், தம்தம் சேஷ்டைகளால் அநேக எண்ணங்களைத் தெரிவித்தலை நாம் நேரில் பார்க்கிறோம். மேலும் மனிதர்களாலும் தமது கருத்துக்கள் சப்தமின்றி வேறு கருவிகள் மூலம் காட்டப்படுகின்றன. இதற்கு ஆங்கிகம் முதலிய நாட்டிய பேதங்களால் நன்றாய் பதாகம்திரிவதாகும். கடாகாமுகம், ஹம்சாஸியம், கர்த்தரீமுகம், ஹம்லபக்ஷம் முதலிய ஹஸ்தங்களைக் கருவிகளாகக்கொண்டு தமதுட்கருத்தை நாடகங்களில் நடர்கள்வெளியிடுவதே நிதரிசனமாகும். இக்கருத்தைக்கவிமணியாகிய காளிதாசனும்

அங்கைரந்தர்நிஹிதவசநைஸ்ஸூசிதஸ்ஸம்யகர்த்த:॥

சொற்களையுள்ளடக்கிய தமதுஅங்கத்தில் கண்டஅபிநயத்தால் தாற்பரியம் விளங்கிற்று என்று நாட்டியத்தைப் புகழ்ந்திருக்கிறார். மேலும் இக்காலத்தில் நாகரீகத்திற் சிறந்ததென்று உலகமெல்லாம் பெயர்பெற்ற லண்டன் முதலிய பெரிய நகரங்களில் இயற்கையில்

சப்தம் இன்னதென்றறியச் சக்தியற்ற செவிடு, ஊமை முதலியவர்களுக்குப் பற்பல பாடசாலைகள் ஏற்பட்டு அவர்களும் படித்துவருகிறார்கள். மகாவித்துவான்களும் மதிமயங்கத்தக்க பெருங் காவியங்களையும் எழுதிநமது தேசமெங்கும் பரவிவரவும் நாம் படிக்கவும் ஏற்பட்டிருக்கின்றன. இது என்ன ஆச்சரியம். இதுவரையும் எடுத்துரைத்த காரணங்களால் நடையும் நழுவுதலும், கத்திரியும் கத்திரித்தலும், எழுத்தாணியும் எழுதுதலும், சித்திரதூரிகையும் சித்திரித்தலும் போலஎண்ணமும், பாஷையும் சம்பந்தமுடையது என்று துணியப்பட்டது.

ஆதியில் ஒரே ரூபமாய் வெளிவந்த சப்தம் எண்ணிறந்த வேறுபாடுகளடைந்து தேசங்கடோறும் வேறுபட்டு பலரூபங்கள் பெற்றதற்குக் காரணம் என்ன? என்றவினவை சிலர் வினவக்கூடும். இதுவே இப்பொழுது விசாரிக்கவேண்டியவற்றுள் முதன்மைபெற்றதாகும். ஆதிசிருஷ்டியில் ஜனங்கள் பசுக்களைப்போன்ற ஒருமாதிரியாக இருந்தார்கள். அவர்கள் காடுகளிலும், மலைகளிலும், குகைகளிலும் வசித்து கந்தமூல பலாதிகளால் வயிற்றை நிறைத்து மரங்களின்பட்டைகளை உடுத்துத் திரிந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் அக்காலம்பேசியபாஷை மற்றஜந்துக்களைப்போல விளங்காத்தன்மை பெற்றிருந்திருக்கவேண்டும். பிறகு சிலகாலம் செல்ல, நாழிகைக்கு நாழிகை சூரிய உஷ்ணம் அதிகரிப்பதுபோல் மனிதர்கள் புத்திவிருத்தியடையவே அக்குகைகளைவிட்டு குடிசைகளில் குடியேறியும்பச்சைக்காய் கிழங்குகளை உண்பதைவிட்டு அதைவேகவைத்துத் தின்றும்முரட்டுப்பட்டைகளை விட்டு மெதுவான பட்டைகளை உடுத்தியும், நாளுக்கு நாள் நாகரீகம் அடைந்து ரயில், மின் சாரசக்தி, அச்சுயந்திரம் முதலியவைகளை நாளடைவில் விருத்திக்குக் கொண்டுவந்ததுபோல தமது பாஷைகளையும் அவரவர்களே ஒருவகையாகச் சீர்திருத்தப்படுத்தி விருத்திக்குக் கொண்டு வந்தார்கள். பிறகு கிரமமாய் இப்பால் சீர்திருத்த பாஷைகளையடைந்து இப்பொழுது அநேகம் படிகளுக்கு மேலானபடியில் இந்த மனுஷ்லோகம் இருக்கிறது. நமது பாஷையும், சந்திரனைப்போல் கிரமமாய் சீர்திருத்தம் பெற்று

நாம் காணும் இந்நல்ல நிலைமையில் வந்து சேர்ந்தது. ஆனால்பாஷை சீர்திருத்தமில்லா திருந்தகாலத்தையும்,சீர்திருத்தத்திற்குத்தொடங்கிய காலத்தையும் குறிக்க மாத்திரம் ஆதாரங்களில்லை.

இனிமேல் இந்தப்பாஷை எந்தவிதையினிடமுண்டாயிற்றென்றும், எவனால் விதைக்கப்பட்டதென்றும் விசாரித்துப் பார்ப்போம்.

மனிதர்களைப் படைத்த கடவுள் அவர்கள் பழக்க வழக்க உபயோகத்திற்காக பாஷையை சிருஷ்டியாதொழிந்தபோதிலும் அதை உண்டாக்கத்தக்க புத்தியையும் அதற்குவேண்டிய சப்தத்தையும் சிருஷ்டித்தே யிருந்தார். உலகத்தில் சிற்பவித்தையை அறிந்த சிற்பியும், மரம், கல் முதலிய சாமான்களும் சேர்ந்திருக்குமாயின் ஓர் வேலை முடிவதிற்றடை யேதேனுமுண்டோ? ஆதலால்பாஷைமுடிந்தவிதம் இதுவெனச் சிலர் கூறுவதாவது:—ஆதியில் சிருஷ்டிக்கப்பட்டமனிதர்கள் ஆங்காங்கு திரிந்துகொண்டிருக்குங்கால் ஓர் மலையினுச்சியில் காக்கை முதலியவைகளைப்பார்த்து அவைகளின் இயல்பை மற்றவர்களுக்குத்தெரிவிக்கத் தம்முள்ளத்திற்றோன்றியதாற்பரியத்தைக் கைகாற் சேஷ்டைகளைக்கொண்டு வெளியிட உத்தேசித்திருக்கலாம். இதன் மூலம் மற்றவர் அவருடைய உள்ளத்திற்றோன்றிய தாத்பரியத்தை அறிந்திரார். அவர்உடனே தன்விரலால் மரத்தைச் சுட்டிக்காட்டி கா! கா! கா! வென்று சிலவார்த்தைகளைச்சொல்லியிருப்பார். இதனால் மற்றவர் காக்கைகள் இருக்கின்றன வென்று அறிந்திருப்பர். அது முதலாகக் காக்கையென்னும் சொல் ஓர்வகைப் பறவைக்குப் பெயராக ஏற்பட்டது. ஒவ்வொரும் ஒவ்வொரு சமயத்திலும் தத்தம் உள்ளத்திலுதித்த அபிப்பிராயங்களை மற்றவர்களுக்குப் புலப்படுத்தத் தமக்குத் தோன்றியவாறு சப்தங்களையுண்டாக்கி இவ்விதம் அநேக சொற்களை யுண்டாக்கி ஒவ்வொன்றிற்கும் பெயராக்கினர். இதனையே அநுகரண சித்தாந்தம் என்று பெரியோர்கள் வழங்குவர்.

(இன்னும் வரும்)

வி. டி. சீனிவாச ஐயங்கார்.

# மாலினீமாதவம்.

(தொகுதி—௪:ல் ௩௮௩ம் பக்கத்தொடர்ச்சி.)

## அத்யாயம்—23.

## ஸந்தோஷஸமாகமம்.

---

மணக்கோலமாயிருந்த மணிபுரநகரெல்லாம், மாதவன் கொலைக்கேஸால் பிணக்கோலமானபிறகு, நமது பாலூர்ஜமீன்தார், மணிபுரியில் தங்குவதற்குச் சற்றேனும் மனமில்லாதவராயும், மணிபுரம் ஜமீன்தாரின் சரிதையில் அவ்வளவாக த்ருப்தியற்றவராயும், தினகரனை யிழந்ததும் தவிர யாதொரு பாவமுமறியாத மாதவன்பேரில் அவதூறான கொலைக்கேஸ் மணிபுரம் ஜமீன்தாரின் ஏவுதலினால் நேர்ந்ததையும் நினைத்து, மிக மனம் வருந்தியவராய்த் தன் மகளும், தானும் இரண்டு மூன்று உரித்தான வேலைக்காரருடன், மணிபுரத்தினின்றும் புறப்பட்டு, மதுரையில், மாசிவீதியில், சிறுபாளையம் ஜமீன்தார் பங்களாவில் தற்காலத்தில் வாஸஞ்செய்து வருகின்றார்.

ப்ரீவிகௌன்ஸில் அப்பீலுக்குப் போன கேஸ் இன்றைக்கு நாளைக்கென்று இழுபட்டுக்கொண்டேயிருக்கிறது. மணிபுரம் ஜமீன்தாரின் ஸிநேகமும் குறைந்துவிட்டது. இதுவரை ஏராளமாய்ப் பொருளுதவிசெய்துவந்த செட்டியார், ரங்கூனில்தன்னுடைய உண்டியல் கடைகள் முறிந்து போய்விட்டபடியாலும், அநேகமாய், பாபர் மனு தயாரிக்க வேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டபடியாலும், ந்யாயஸ்தலங்களில் வ்யவஹாரங்களின் அநுகூலப்ரதிகூலங்கள் நிலையற்றதென்ற பயத்தாலும் முன்போலத் தாராளமாய்ப்பணம் அனுப்ப முடியவில்லை. ஐயோ! என்செய்வார்? பாவம்! நமது பாலூர் ஜமீன்தார் தன் ஏகபுத்ரனை தினகரன் மரணத்துக் கழுவாரா? அல்லது தன் புதல்வனிலு மதிகமாய் வளர்த்த மாதவன் நிலைமைக்கழுவாரா? தன்பதவிகளெல்லாம் நிலைகுலைந்து இவ்வாறு அவதிப்பட நேர்ந்ததை நினைத்தழுவாரா? என்னசெய்வார்?

“பட்டகாலிலேபடும் கெட்டகுடியே கெடுமல்லவா?” ஆஹா! இவ்வுலகிற் பிறக்கும் ஸமஸ்த ஜீவராசிகளுக்கும், பிறவிமுதல் உடன்

பிறக்கும் ஓர் பொதுக்குண முண்டல்லவா? அதுதான்பசியென்று பெயர். பசித்தழாப் பிள்ளை பிழைக்காது. ஆகையால் பசியே ஸகல ஜீவராசிகளின் நடத்தைகளுக்கும் ஆதி காரணமாகின்றது.

அப்பசியைத் தீர்க்க உணவும், உணவுதேடப் பணமும் வேண்டும். போதுமான பணமின்மையே வறுமையெனப்படும். வறுமையே எல்லாத்துர்ப் பாக்கியங்களிலு மதிகக்கொடியது.

"கொடியது கேட்கி னெடியவெவ் வேலோய்,
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது முதுமையில் வறுமை"—ஔவை.
"பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரன் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலா மகல வோட்டி மானமென் பதனை வீட்டி
யில்லெலா மிரத்த லந்தோ விழிவிழி வெந்த ஞான்றும்."
(—குசேலோபாக்யானம்)

தன்பதவி குலைந்து தன்னைப்போன்ற இதர ஜமீன்தார்களை பார்த்துப் பிழைக்க நேர்ந்ததை நினைத்து நினைத்து பாலூர் ஜமீன்தார் மனம் நொந்தார்.

அதிகமாய் வளர்ப்பதேன். மாதவனைத் தூக்குப்போடக்குறிப்பிட்டகாலைசுமார் 7 மணியிருக்கலாம். முற்கூறிய ஜாகாவில் ஓர் அறையில் ஓர் சாதாரணமான படுக்கையில் பாலூர் ஜமீன்தார்படுத்து இருபுறமும்புரண்டுகொண்டிருக்கின்றார். தூங்குகின்றாரா? அல்ல! தூக்கமேது இவ்வளவு அவதிகள் நடுவில்? இராமுழுமையும் தூங்காது, "அப்பா! அப்பா! ஐயோ; என் கண்மணி! ஐயோஎன் இரண்டுகண்களும்ஒரே காலத்திலா நானிழப்பேன். அப்பா! அப்பா," என்றுகதறிக்கொண்டிருக்கிறார். அறைக்கதவு மூடப்பட்டிருந்தது.

இந்நிலைமையில், பனிகாலஇரவு முடிவில், பனிக்கொடுமையால், வாடிச்சுருங்கிக் கிடக்கும், செந்தாமரை மலர்போல், வாடிவெழுத்த முகமும் தனக்கியற்கையாயுள்ள மூகலக்ஷணங்களெல்லாங்குறைந்து சரீரம்வாடி, பதவிக்கும் பருவத்துக்கும் தக்க உடை அணி யாகொன்று மற்றவளாய், நமது மாலினீ 7. மணியடித்தும் தன்பிதா,படுக்

கையைவிட் டெழுந்திருப்பதைக் கவனித்து மனம்பதறி, அவ்வறையண்டை சென்று "அண்ணு! அண்ணு!" என்றுமெதுவாய் ஐந்தாறு தடவை கதவுகளைத் தட்டினுள். ஒரு பதிலும் காணவில்லை. மனம் பதறினுள். என்னசெய்வாள்? பாவம்! யாருமற்ற அநாதையாய் விட்டாளல்லவா? தமையனுக்கும் ஏதாவது விபத்து நேர்ந்துவிட்டதோ. அப்படியேதாவது நேர்ந்தால் அவள் கதி அதோகதிதான். "நேற்றிரவு நெடுநேரம், தினகரனைப்பற்றியும் மாதவனைப்பற்றியும் நினைத்து நினைத்துக் கதறிக்கொண்டிருந்தாரே! ஒரு சப்தமும் உள்ளே கேட்கவில்லையே. ஒருவேளை சோகபாரம் தாங்காது எங்கேயாவது ஓடிப்போய்விட்டாரோ? அல்லது உயிர்துறந்துவிட்டாரோ! அல்லது தற்கொலை புரிந்தாரோ! என்ன செய்வேன்! என்ன செய்வேன்! அண்ணு! அண்ணு! என்ன செய்வேன்" என்று கையைக் கையை நெறித்துக்கொண்டு கடைசியாய் கைகுவித்து முகத்தைச்சாய்த்து "ஐயோ! யாருமற்றபாவியானேனே! தெய்வமே! தெய்வமே!" என்று நமது மாலினீ கதறினுள்.

இப்ரலாபத்தைக் கேட்டு, "என்னடியம்மா! மாலினீ! என்ன? என்ன?" என்று பதைபதைப்புடன் கேட்டுக்கொண்டே தோழி கமலா ஓடிவந்தாள்.

மாலினீ:—"கமலா! அம்மா! ஐயோ! அண்ணு உள்ளே படுத்திருந்தாரே! ஒரு சத்தமும் கேட்கவில்லையே! கதவைத் தட்டித் தட்டிப் பார்த்தேனே. ஐயோ! என்னசெய்வேன் என்னசெய்வேன்" என்று கையைப் பிசைந்தாள்.

அதற்குள் வேலைக்காரன் ஓடிவர, எல்லோரும் கதவைத் திறந்தார்கள்.

மாலினீ மான்குட்டிபோல ஒரே தாவாய்த் தாவித் தன் தகப்பனுர் படுக்கையில் பாய்ந்து அவர் பக்கத்தி லுட்கார்ந்து அவரைக் கட்டிக்கொண்டு, "அண்ணு! அண்ணு! ஐயோ! ப்ரதிதினமும், உதயத்துக்கு முன் எழுந்திருப்பீர்களே! 7. மணியாய்விட்டதே! ஏதண்ணு உங்களுக் கென்னசெய்கிறது! அண்ணு! ஒரு வார்த்தை கூடச் சொல்லமாட்டே னென்கிறீர்களே! ஐயோ! அண்ணு! மாலினீ

மாலினீ! என் றழைப்பீர்களே! ஐயோ! அவ்வினிய பதங்களையு மறந்துவிட்டீர்களோ! அடி. கமலா! ஐயோ! ஒன்றுந் தெரியவில்லையே! டாக்டரையாவது வரவழையேன்! அடியே அண்ணாவும் என்னைக் கைவிட்டு விடுவார்களோ!” என்று ப்ரலாபித்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்திற் கெல்லாம், டாக்டர் சுந்தரராஜசர்மா வந்து சேர்ந்தார். கைபிடித்துப்பார்த்து ‘அம்மணீ’ இதொன்றும் பய மில்லை. ஏதோ அசதியாயிருக்கின்றார், உங்கள் தகப்பனார்! ஒரு வேளை இரவில் வெகுநேரம் விழித்திருந்தாரோ, என்று வினவ, மாலினீ “ஆமாம், நேற் றிரவெல்லாம் என் தமயனையும்—” என்று கண்ணீர் தாரை தாரையாய்ச் சொரிந்து “ஹா! ஹா!” என்று விம்மி யழுதாள்.

டாக்டர், “சரி. இருக்கட்டும், இந்தச்சமாசாரங்களைப்பற்றி இவர் களுடன் ஒன்றும் சொல்லவேண்டாம். இக்கொடுந்துன்பமே, இவர் தேகத்தையு மதிகமாய்த் தாக்கிவிட்டது. இதை மறப்பதற்கு என்னென்ன உபாயங்க ளுண்டோ, அவைகளை நீங்கள் செய்யவேண் டும்.”

இந்நிலைமையில் ஜமீன்தார் திடுக்கிட் டெழுந்துட்கார்ந்து ‘என் னப்பா! என்னப்பா! ஐயையோ! போனாயோ! மாதவ! போனாயோ! போனாயோ!, என்று மார்பிலும் தலையிலும் படீர், படீர், என்று மாறி மாறி யடித்துக்கொண்டார். அருகில் நின்ற அதிபால்யரும், அதிலும் அபலை களுமான மாலினீயும் கமலாவும் ஒன்றும் செய்யத் தோன்றாதவர்களாய் கைகால் பதறி ஐயோ ஐயோ. வென்று கதறி னார்கள். டாக்டரும் ஒன்றும் சொல்லத் தோன்றாதவராய் ஸ்தம் பித்து நின்று விட்டார்.

“அப்பா! ஐயையோ இரண்டு கண்ணும் போச்சே! இரண்டும் போச்சே! ஐயையோ! மாதவனைக் கொண்டு போறான்! கொண்டு போறான்! ஐயையோ விடாதே! விடாதே! ஐயையோ ஐயையோ” என்று கதறித் திடீரென்று கட்டிலினின்றும் குதித்து அறைக்கு வெளியே ஓட ஆரம்பித்தார்.

உடனே டாக்டரும் இரண்டு வேலைக்காரருமாக அவரைப் பிடித்திழுத்து மறுபடி கட்டிலி லுட்கார்த்தி, பிடித்துக்கொண்டு விசிறிபோட்டு விசி ஆசுவாசப்படுத்தினார்கள்.

"அப்பா! அப்பா! என் இரண்டு கண்ணுமாபோகும்? தினகரன் போனானே. நீங்களிருவரும் இரண்டு கண்கள்போ லிருந்தீர்களே! கண்மணிகளே! மாதவ! அவனுடன் நீயும் போகவேணுமா. அப்பா! என்னைக் கூட்டிச் செல்லலாகாதா! . ஐயோ! ஐயோ!" என்றலறினார்.

இந்த நிலைமையில், திடீரென்று வாசலில்ஒரு குதிரை வண்டி வந்து நின்றது. அதிவிரைவில் உள்ளிருந்து நால்வர் குதித்தார்கள். திடீரென்று வாயிற் கதவும் திறக்கப்பட்டது. நால்வரும் நேரே சரேலென்று நமது ஜமீன்தாரின் அறைக்குட் புகுந்தார்கள்.

அவ்வாறு பிரவேசித்தவர்கள் நமது மாதவன், தினகரன், பரதேசி, அன்னவர் சகோதரி. தினகரனையும் மாதவனையும் பார்த்ததும் அங்கிருந்தோர்க்கு தாங்கள் காண்பது கனவோ அல்லது நினைவோ என்று பிரமித்துவிட்டார்கள். தினகரனிறந்து பலமாதங்களாயின. மாதவன் இன்று காலை தூக்குக்கிரையானானே. ஒரு வேளை அவர்களின் ஆவிகள் தான் பிசாச ரூபமாய் இவ்வாறு தோன்றுகின்றனவோ! பகல் வேளைகளில் பிசாசுகள் நடமாடாவே. அதிலும், எல்லோர் கண்களுக்கும் ஒரே மாதிரியாகவா இவ்வாறு தோன்றும்! பிசாசுகள் மனதின்பல ஹீனத்துக்குத் தக்கவாறல்லவோ ஆவிர்ப்பவிக்கின்றன! இதென்னமாயம்! ஒன்றும் விளங்கவில்லையே! என்று எல்லோரும் மதிகலங்கி யாதொன்றும் செய்யத் தோன்றாது திகைத்திருக்கையில் விசேஷமாய்ச் சஞ்சலமடைந்த நமது பாலூர் ஜமீன்தார், "அடேடே அப்பா தினகர! என்னைப்பயமுறுத்தாதே. அடே மாதவ! என்னை வருத்தாதீர்கள்! உங்கள் கட்டையை கரையேற்றநான் ராமேசுவரம்போகிறேன். ஐயையோஎன்னைப்பயமுறுத்துகின்றீர்களே. ஐயையோ!நீங்கள் செத்தவர்கள் வந்து பிசாசாக என்னைப்பயமுறுத்துகின்றீர்களே!ஐயையோ!என்ன செய்வேன்!என்ன செய்வேன்! ஏ! ஏ! பரதேசி! நீதான் கைக்கருப்பை ஏவிவிட்டாயோ! ஐயோ ஓட்டு ஓட்டு, இந்தப் பிசாசுகளை ஓட்டு. உனக்குக்

கோடி புண்யமுண்டு! இதோ! இன்றைக்கே ராமேசுவரம் போறேன். துர்மரணமாயிறந்தாலல்லவோ தகப்பன் என்றுகூட எண்ணுமல் என்னை—" என்று கதறிக்கொண்டே தன் முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு திடீரென்று கீழே சாய்ந்தார். உடனே எல்லா ஸம்பவங்களுக்கும் தயாராயிருந்த துட்பதர்சியான நமது பரதேசி, சமயத்துக்குதவி, சாய்பவரைத் தாங்கி, அருகிலிருந்த சோபாவில் சாய்த்துப் பன்னீர் தெளித்து, விசிறிகள் வீசி வேண்டியபடி ஆசுவாஸப் படுத்தினர். இதற்குள், மற்றவர்களும் இவையெல்லாம் கனவு மல்ல, மனதின் நினைவு மல்ல, தினகரனும் மாதவனும், உயிர்த்திருக்கத் தாங்கள் காண்பது உண்மைதான் என்று தைர்யமடைந்தார்கள்.

இதுவரை யொன்றும் செய்யத் தோன்றாது பிரமித்துக் கொண்டிருந்த நமது மாலினி திடுக்கிட்டு நித்திரையினின்றும் கண் விழித்தவள் போல மான்பேடு போலத்துள்ளி "அண்ணு வென்று கதறிக்கொண்டு, தினகரன் மேல் பாயத் தினகரன் கண்ணே என்று கதறியவளை வாரி யணைந்து கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருக்கினன். இதற்குள் பாலூர் ஜமீன்தாரும் திடுக்கிட்டு விழிக்கவே தினகரன் 'அண்ணு! நான் தினகரனில்லையா! தெரியவில்லையா'வென்று கதறிக்கொண்டு தன் தகப்பனுரண்டை செல்ல அக்கிழவர், அப்பா! அப்பா! தினகர! என் கண்மணி! அப்பா! நீ தினகரன் தானு! ஐயோ! என் மாதவன் போனுனே! போனுனே! அடேடே பாவிப்பயல்களா! மாதவனைக் கொல்லாதே! கொல்லாதே! ஐயையோ! ஐயையோ! என்றலற மாதவனருகிற் சென்று 'மாமா! இதோ இருக்கிறேனே! தெரிய வில்லையா' என்று கண்ணீர் தாரை தாரையாய்ப் பொழிந்தான்.

அதிகமாய் வளர்ப்பானேன். அப்பரிதாபக் காட்சியை வர்ணிக்கப்போதுமான வார்த்தைகளுமில்லை. நடந்தவை யெல்லாம், சரீர அங்கச் சேஷ்டைகளும், ரோதனங்களும், ஆலிங்கனங்களுமே யொழிய வேறில்லை.

இவ்வாறு கால்மணி நேரஞ் சென்ற பிறகு, பெரும் புயலால் தாக்கப்பட்டு, அங்கு மிங்கும் தத்தளித்த மரக்கலம் போல, எல்

லாம் ஆடி அமர்ந்தன. பிறகு எல்லா விருத்தாந்தங்களும், ஒருவ ருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள். இதற்குள் ஊரிலுள்ள பெரியோர்களும், நண்பர்களும், இவ்வதிசய சம்பவத்தைக் கேட்டு, ஜமீன்தாரை க்ஷேமம் விசாரிக்க வந்தார்கள். வாசலில் ஜனங்கள் திரள் திரளாய்க் கூடினார்கள். இவ்வற்புத காட்சியை அதிகமாய் வர்ணிப்பதைப் பார்க்கிலும் நமது நண்பர்கள் ஊகித்துக் கொள் வதே சுலபம்.

இந்த நிலைமையில் திடீரென்று, ஓர் தந்திச் சேவகன் பிரவேச மாய், ஜமீன்தாரை நோக்கி, 'எசமான் தந்தி வந்திருக்குது, என்று சொல்லித் தந்தியை நீட்ட, உடனே ஜமீன்தார் பரபரப்புடன் வாங் கி உடைத்துப் படித்தார்.

தந்தி விவரம்

மேஸேர்ஸ் தாம்ஸன் அன்ட் ப்ரௌன்
ஸொலிஸிடேர்ஸ்
கிங்க்ஸ்வே
லந்தன்

பாலூர் ஜமீன்தார் அவர்களுக்கு
மதுரை
தென்இந்தியா.

"தங்களுக்கு ப்ரீவி கௌன்ஸில் கேஸ் அநுகூலமான விஷயம் தெரிவிக்க எங்களுக்கு அபரிமிதமான சந்தோஷம்"

என்ன சொல்வது, கதிரவன் வரவால் மலர்ந்த தாமரைக்குளம் போல ஆங்குள்ளோர் எல்லோர் முகங்களும் இச்சந்தோஷ சமாசா ரத்தாலும் இவ்வதிசய சம்பவங்களின் சேர்க்கைகளாலும் ஆதவ னைக் கண்ட இருள் போல, இச்சிறு குடும்பத்துக்கு மேல் மேல் நேர்ந்த கஷ்டங்கள் திடீரென்று விலகிய அதிசயத்தாலும், ஆச்சர் யமடைந்து மலர்ந்தன.

(இன்னும்வரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்.

# சமாசாரக் கொத்து.

பள்ளத்தூர் சத்திய ஞான சன்மார்க்க சங்கம்:—25—5—13 மாலை 4 மணிக்கு சபைகூடியது. நகரத்தார்கள் ஆண்பாலாரும் பெண்பாலாரும் சுமார் 300 பேர் வரை வந்திருந்தனர். மதுரை வித்துவான் பிரம்மஸ்ரீ நா. சுந்தரேசுவரய்யரவர்கள் அக்கிராசனத்தமர்ந்து முகவுரை கூறிய பின் 4 மாணவகர்களும் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் சிதம்பரபுன்னைவனநாத முதலியாரவர்களும் உபந்யாசஞ் செய்தனர். பின்னர் மதுரை வித்தியாபாநுப்பத்திராதிபர் மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் அறிவுடைமை என்னும் விஷயத்தைப்பற்றி ஒன்றரைமணிநேரம் உபந்யசித்தார்கள். சபாநாயகரவர்கள் எல்லாவற்றையும் வியந்து முடிவுரை கூறினார்கள். சங்கத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதியவர்கள் யாவர்க்கும் வந்தனம் கூறிப் பூமாலை சூட்டினார்கள். மிகவும் சந்தோஷகோலாகலத்துடன் இரவு 9 மணிக்கு நிறைவேறியது.

நாச்சியாபுரம் செந்தமிழ் வாசகசாலைப் பிரசங்கம்:—28-5-13ல்மாலை 4 மணிக்கு ஒரு பெருஞ்சபை கூடியது. நகரத்தார்களும் பிறருமாக 400 பேர் வரை வந்திருந்தனர். மதுரை வித்தியாநுப் பத்திராதிபர் மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் அக்கிராசனத்தமர்ந்தனர். கடவுள்வாழ்த்துக் கூறிய பின் அக்கிராசனர் முகவுரைகூறியதும் அவண் மாணவகர் நாராணையர் கொல்லாமை என்னும் விஷயத்தையும், மதுரை வித்துவான் ஸ்ரீ நா. சுந்தரேசுவரய்யரவர்கள் வாய்மை என்ற விஷயத்தையும், மாணவகர், வயி. அ. நாச்சியப்பசெட்டியார் கல்வி என்ற விஷயத்தையும், நா. க. நாச்சியப்பசெட்டியாரவர்கள் கற்பு என்ற விஷயத்தையும், குன்றக்குடி ஸ்ரீ ராமசுவாமிசாஸ்திரிகள் பரோபகாரம் என்ற விஷயத்தையும், கடலூர் காலேஜ் உபாத்தியாயரும் வித்துவானும் ஆகிய ஸ்ரீமத் பலராமய்யரவர்கள் பீ. ஏ. நூலாராய்ச்சி என்னும் விஷயத்தையும், மாணவகர், நா. நாச்சியப்பசெட்டியார் அருள் என்ற விஷயத்தையும், காரைக்குடி ஸ்ரீமாந் முருகப்பசெட்டியாரவர்கள் குணம் என்ற விஷயத்தையும், இராமநாதபுரம் ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதர், ஸ்ரீமத் ஏ சுந்தரராஜய்யங்காரவர்கள் உண்மை என்றவிஷயத்தையும், குன்றக்குடி ஸ்ரீமத், ராமச்சந்திரசாஸ்திரிகள் தருமம் என்ற விஷயத்தையும் முறையே மிக நன்றாகப் பிரசங்கித்தார்கள். முடிவில் சபாநாயகரவர்கள் ஒவ்வொரு உபந்யாசங்களின் சாரங்களையும் வியந்தெடுத்துப் பேசியதுடன் நட்பு என்ற விஷயத்தைப் பற்றி 40 நிமிஷம் பிரசங்கித்தனர். செந்தமிழ்வாசகசாலைத் தலைவரவர்கள் எழுந்து சபாநாயகரவர்கள், உபந்யாசகர்கள், அபிமானிகள் யாவருக்கும் வந்தனங்கூறிச் சந்தன தாம்பூலம் வழங்கியபின் கடவுள்வாழ்த்துச்கூறப்பெற்று இரவு 10 மணிக்கு நிறைவேறியது.